**E.A..No. 4/2025 in E.P.No. 116/2018 நாள் 05.02.2026 PW 1 – ஜெயஉமா**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (1ம் எதிர்மனுதாரர்தரப்பில்)

2ம் எதிர்மனுதாரர் ராஜ்குமார் யார் என்றால் எனது அப்பா. எனது தகப்பனார்தான் இந்த கோரிக்கை மனு போட சொன்னார் என்றால் இல்லை. என் அப்பாவுடன்தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 22.08.2017 அன்று எங்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கோரிக்கைமனுதாரர்களாகிய நாங்கள் எல்லோரும் மைனர்கள் என்றால் சரிதான். தபசில் சொத்து குறித்து 20.01.2016 அன்று இசைவு தீர்ப்பாயத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது தகப்பனார் மீனா குமாரி என்ற வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தி வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. 20.02.2016 அன்று தினமலர் நாளிதழில் எனது தகப்பனார் ஆஜராக கோரி அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த இசைவு தீர்ப்பாயத்தில் 22.07.2017 அன்று இடைக்கால ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. அதன்பிறகுதான் என் அப்பா எங்களுக்கு என் அம்மாவை கார்டியனாக போட்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் சொத்து Attachment செய்யப்பட்டது 26.09.2017. மேற்படி Attachment உத்தரவிற்கு பிறகுதான் எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார், எனது அம்மா ஆகியோர்கள் சேர்ந்து மேற்படி சொத்தை பாதுகாக்க வேண்டுமென்று சட்டத்திற்கு புறம்பாக சொத்தை எங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. ஜப்தி உத்தரவு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு முறைப்படியாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் எங்களுக்கு எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் செல்லக்கூடியதல்ல என்றுசொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றவிடாமல் கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் மனு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.